# நவம்பர் – 10 – வெள்ளி

## புனித பெரிய லீயோ

**நான் ஆண்டவரைப்பற்றிப் பெருமையாகப் பேசுவேன்: எளியோர் இதைக் கேட்டு அக்களிப்பர். திபா. 34:2**

## முதல் வாசகம் : உரோமையர் 15 : 14 - 21

என் சகோதர சகோதரிகளே, நீங்கள் நன்னயம் நிறைந்த வர்களாயும், எல்லா அறிவும் நிரம்பப் பெற்றவர்களாயும், ஒருவர் மற்றவரை அறிவுறுத்தக் கூடியவர்களாயும் இருக்கிறீர்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். ஆயினும் உங்களுக்கு நினைவூட்டும் வகையில் சிலவற்றை இக்கடிதத்தில் மிகத் துணிவோடு எழுதியுள்ளேன். நான் கடவுளின் அருளைப் பெற்றவன் என்பதால் தான் அவ்வாறு எழுதினேன். அந்த அருள்தான் என்னைப் பிற இனத்தாருக்குப் பணிசெய்யக் கிறிஸ்து இயேசுவின் ஊழியனாக்கிற்று. பிற இனத்தார் தூய ஆவியால் அர்ப்பணிக் கப்பட்ட, கடவுளுக்கு உகந்த காணிக்கையாகும்படி அவர்களுக்கு கடவுளின் நற்செய்தியை அறிவிப்பதே என் குருத்துவப் பணி. ஆகையால், கடவுளுக்காகச் செய்யும் இந்தப் பணியை முன்னிட்டு, கிறிஸ்து இயேசுவுக்குரியவனாகிய நான் பெருமை பாராட்டிக் கொள்ள இடமுண்டு. பிற இனத்தார் தமக்குக் கீழ்ப்படியும் பொருட்டுக் கிறிஸ்து என் வழியாய்ச் சொல்லாலும் செயலாலும், அரும் அடையாளங்கள், அருஞ் செயல்களின் வல்லமையாலும், கடவுளின் ஆவியின் வல்லமையாலும் செய்து முடித்தவற்றைத் தவிர வேறெதைப் பற்றியும் பேச நான் துணியமாட்டேன். இவ்வாறு, எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் மாநிலம் வரை எங்கும் சுற்றிக் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை முடித்துவிட்டேன். கிறிஸ்துவின் பெயரைக் கேள்விப்படாத இடங்களில் மட்டும் நற்செய்தி அறிவிப்பதே என நோக்கமாய் இருந்தது. ஏனெனில் வேறொருவர் இட்ட அடித்தளத்தின்மேல் கட்டி எழுப்ப நான் விரும்பவில்லை. ஆனால், ”தங்களுக்குச் சொல்லப்படாததை அவர்கள் காண்பர் தாங்கள் கேள்விப்படாததை அவர்கள் புரிந்துகொள்வர்” என்று மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா!

**பதில்பாடல் :** பிற இனத்தார் கண் முன்னே ஆண்டவர்
மீட்பை வெளிப்படுத்தினார்.

## நற்செய்தி : லூக்கா 16 : 1 - 8

அக்காலத்தில் இயேசு தம் சீடருக்குக் கூறியது ”செல்வர் ஒருவருக்கு வீட்டுப் பொறுப்பாளர் ஒருவர் இருந்தார். அவர் தம் தலைவரின் உடைமைகளைப் பாழாக்கியதாக அவர்மீது பழி சுமத்தப்பட்டது. தலைவர் அவரைக் கூப்பிட்டு, ”உம்மைப்பற்றி நான் கேள்விப்படுவது என்ன? உம் பொறுப்பிலுள்ள கணக்கை ஒப்படையும். நீர் இனி வீட்டுப் பொறுப்பாளராய் இருக்க முடியாது” என்று அவரிடம் கூறினார். அந்த வீட்டுப் பொறுப்பாளர், ”நான் என்ன செய்வேன்? வீட்டுப் பொறுப்பிலிருந்து என் தலைவர் என்னை நீக்கி விடப்போகிறாரே! மண்வெட்டவோ என்னால் இயலாது. இரந்து உண்ணவும் வெட்கமாய் இருக்கிறது. வீட்டுப் பொறுப்பிலிருந்து என்னை நீக்கிவிடும் போது பிறர் என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என எனக்குத் தெரியும்” என்று அவர் தமக்குள்ளே சொல்லிக்கொண்டார். பின்பு அவர் தம் தலைவரிடம் கடன்பட்டவர்களை ஒவ்வொருவராக வரவழைத்தார். முதலாவது வந்தவரிடம், ”நீர் என் தலைவரிடம் எவ்வளவு கடன்பட்டிருக்கிறீர்?” என்று கேட்டார். அதற்கு அவர், ”நூறு குடம் எண்ணெய்” என்றார். வீட்டுப் பொறுப்பாளர் அவரிடம், ”இதோ உம் கடன் சீட்டு உட்கார்ந்து ஐம்பது என்று உடனே எழுதும்” என்றார். பின்பு அடுத்தவரிடம், ”நீர் எவ்வளவு கடன்பட்டிருக்கிறீர்?” என்று கேட்டார். அதற்கு அவர், ”நூறு மூடை கோதுமை” என்றார். அவர், ”இதோ, உம் கடன் சீட்டு எண்பது என்று எழுதும்” என்றார். நேர்மையற்ற அந்த வீட்டுப் பொறுப்பாளர் முன்மதியோடு செயல் பட்டதால், தலைவர் அவரைப் பாராட்டினார். ஏனெனில், ஒளியின் மக்களைவிட இவ்வுலகின் மக்கள் தங்கள் தலைமுறை யினரிடத்தில் மிக்க முன்மதியுள்ளவர்களாய் நடந்துகொள்ளு கிறார்கள்“ என்றார்.

**தியானம்:** இன்றைய தியானவாசகமானது பணியைப்பற்றியும், அக்காலங்களில் உண்மையுடனும் நேர்மையுடனும் செயல்படவேண்டும் என்பதையும், எவ்வகையான சூழலிலும் நற்செய்தியை அறியாதவர்களுக் எடுத்தச் சொல்ல தயக்கமடையக்கூடாது என்பதை தெளிவுபடுத்துகின்றது. முதல் வாசகத்தில் புனித பவுல் இயேசுவை ஏற்றுக்கொள்ளாத பிற இனத்தார், இயேசுவை ஏற்றுக் கொள்ளாதோர் மத்தியில் நற்செய்தியை அறிவிப்பதே தனது குருத்துவப்பணி என்பதை தெளிவுபடுத்துகின்றார். தூயஆவியானவரைப் பெற்றுக்கொண்டுள்ள எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணிகள் கொடுக்கப் பட்டிருக்கின்றது. கிறிஸ்துவைப்பற்றி அறியாதவர்களுக்கு அறிவித்தும், வைத்தியசாலையில் நோயுற்றிருப்பவர்களுக்கு உதவி செய்வதும், ஆறுதல் அற்று வேதனையடைவோருக்கு ஆறுதல் கூறியும் பொது நிலையினராகிய நாங்கள் இவ்வாறு பலவகையில் செய்படலாம். ஆனால் நாங்கள் இதை உணராதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நேரங்களை தேவையற்ற வகையில் செலவழித்துக் கொண்டிருக்கின்றோம். கொடுத்த பணிகளையும் சரிவரச் செய்யத் தவறிவிடுகின்றோம். ஆனால் இவற்றை உணர்ந்தவர்களாக எமது பணியினை உண்மையுடனும் நேர்மையுடனும் செயல்படுதது வோமாயின் இறைவன் மென்மேலும் எங்களை எடுத்து பயன்படுத்துவார். இன்றைய நற்செய்தி வாசகத்திலும்கூட வீட்டுப்பொறுப்பாளர் தலைவரின் சொத்துக்களை அழித்து நேர்மையற்றவராக இருந்ததால் அப்பொறுப்பிலிருந்து தகுதியற்றவராக வெளியேற்றப்படுகின்றார். இருப்பினும் அவரது முன்மதியுடன் செயற்பட்டதால் தலைவரின் பாராட்டைப் பெற்றார். எனவே நாங்களும் பணிசெய்வதில் தவறியிருந்தாலும் பணியின் மேன்மையை உணர்ந்தவர்களாக உண்மையுடன் ஊழியம் புரிய இறைவனுக்கு உரிய வகையில் வாழ்வோம்.